விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 191 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 13 வியாழக்கிழமை (27.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அதிபர்கள், ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

### நீர்த்தாரை, கண்ணீர்புகைக் குண்டுவீச்சு



3 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்திடம் கையளித்த எம் உறவுகள் எங்கே?

### முல்லையில் உறவுகள் போராட்டம்



6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு மாவட்ட அரச அதிபர்கள் நியமனம்




6 ஆம் பக்கம் பார்க்க

# மாங்குளத்தில் கோர விபத்து

## 3 பேர் ஸ்தலத்திலேயே மரணம்





(முல்லைத்தீவு)

மாங்குளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சொகுசு பேருந்து மீது டிப்பர் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் செயற்பாடுகள் வழமைபோன்று இடம்பெறும் கல்வி அமைச்சு

(கொழும்பு)

அனைத்து அரச பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் இன்று வழமை போன்று இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறித்த விடயம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர், அதிபர்கள் இன்றும் சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள நிலையில் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,10)

### பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து

## அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டம் இன்றும் தொடரும்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்து அதிபர்கள், ஆசிரியர்களது போராட்டம் இன்றும் தொடரும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை வழங்காது, தமக்கு கிடைக்கவேண்டியதை கேட்கும் அதிபர், ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான இன்

15

### கிளிநொச்சியில் மீன் வாங்கியவர்

## துவிச்சக்கரவண்டியுடன் மயங்கி விழுந்து மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சந்தையில் மீன் வாங்கி வரும்போது துவிச்சக்கரவண்டியுடன் மயங்கி வீழ்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செல்வாநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சீனிவாசகம் கோவிந்தராஜ் (வயது-66) என்பவரே உயிரிழந்த வராவார்.

15



## பொருளாதார புதைகுழியிலிருந்து குறுகிய காலத்தில் மீண்டுள்ளோம்

### விசேட உரையில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

பொருளாதார புதைகுழியிலிருந்து குறுகிய காலத்தில் மீண்டுள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு நேற்று விசேட உரையாற்றியபோதே அவர் இதனைக்

02

## பால் புரைக்கேறியதில் 40 நாள் குழந்தை மரணம்

### இணுவில் கிழக்கில் சம்பவம்

(இணுவில்)

பால் புரைக்கேறியதில் பிறந்து நாற்பது நாட்களேயான பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இணுவில் கிழக்கில் நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பிரவீன் அக்ஷரா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று அதிகாலை

15

### கிராம சேவகர்கள்

## இன்றும் நாளையும் வேலை நிறுத்தம்

(கொழும்பு)


கிராம சேவகர்கள் இன்றும் நாளையும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று மற்றும் நாளை அனைத்து

15

## வடக்கில் மீள்குடியேற்றம் முன்னெடுக்கப்படுகின்றது

### பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் மீள்குடியேற்றும் செயற்படும் உரிய

15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஓய்வு பெற்ற அதிபர் கமலநாதன் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக நீண்ட காலம் கடமையாற்றிய பொ.கமலநாதன் அவர்கள் நேற்று காலமானார்.



கொக்குவில் இந்துக் கல்லூரியில் 10 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற கமலநாதன் அவர்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றியிருந்தார்.

ஓய்வுக்குப் பின்னர் சமய சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்திருந்த அவர், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் சுன்னாகம் வாழ்வகத்தின் பொருளாளராகவும் இருந்து பெரும் பணியாற்றியவர்.

அவரின் இறுதிக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம் பெறும். (ந)

# பெரமுன வேட்பாளராக ரணில் களமிறங்கினால் தோல்வி உறுதி

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால், அவரால் வெற்றிபெற முடியாது என, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நான் அமைச்சரவையில் இணைந்து கொள்ளப் போவதில்லை.

எனது அரசியல் வாழ்க்கையில் என்றுமே செல்வங்களுக்காகவும் பதவிகளுக்காகவும் எந்த முடிவையும் எடுத்ததில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படுவது என்பது புதிய விடயம் இல்லை. நான் இப்போது மக்களின் பிரதிநிதி, நாட்டின் முன்னேற்றத்தையே விரும்புகிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டின் வரிசை யுகத்தை நிறைவு செய்து பல சலுகைகளை மக்களுக்காக வழங்கினார்.

அதில் ஈர்க்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

ஆனால், ராஜபக்ஷக்களுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுவாராக இருந்தால் அவர் வெற்றி பெறுவது கடினம்" என ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

### பொருளாதார...

குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் பிரதான உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் நேற்று காலை கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் இறுதி உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் நேற்று பீஜிங்கில் இறுதி உடன்பாடு எட்டப்பட்டது.

அத்தோடு, அதற்கான முறையான நடைமுறைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டை நேசிக்கும் அனைவருக்கும் இது நற்செய்தியாகும்.

சிலர் ஜனாதிபதி பதவிக்காக கடுமையாக பாடுபடும் நிலையில் நான் நாட்டிற்காக பாடுபட்டு வருகிறேன்.

அவர்கள் தமக்குக் கிடைக்கும் பதவிகளைப் பற்றிக் கனவு காணும் போது, நாட்டின் அபிவிருத்தியைப் பற்றிக் கனவு காண்கிறேன்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் இலங்கைத் தாயை ஆபத்தான கயிற்றுப் பாலத்தின் ஊடாக கொண்டு வர முடிந்துள்ளது.

ஹனுவட்டயே நாடகத்தில் வருவதைப் போன்று கடினமான நிலைமையில் குழந்தையை பாதுகாப்பதற்கு அஞ்சி எந்த ஆதரவையும் வழங்காத நபர்கள், குழந்தை கயிறு பாலத்தை கடக்கும் முன்பே குழந்தையின் உரிமையைக் கேட்டு போராடுகின்றனர்.

கடனை செலுத்த முடியாமல் வங்குரோத்தான நாடென்று முத்திரை குத்தப்பட்ட ஒரு நாட்டினால் இரண்டு வருடங்களில் இந்தளவு முன்னேற்றத்தைப் பெற முடிந்திருப்பது பாரிய வெற்றியாகும்.

அண்மைய வரலாற்றில் பொருளாதார புதைகுழியில் விழுந்த உலகின் எந்த நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வாறான நிலையை அடைந்ததில்லை.

நாடு எதிர்நோக்கும் சவால்களை உண்மையாகப் புரிந்து கொண்டு அவற்றிற்கு நடைமுறைத் தீர்வுகளை வழங்கி, முடிவுகளைக் காட்டிய என்னுடன் சேர்ந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வீர்களா?

இல்லையேல் இன்னும் பிரச்சினையை புரிந்து கொள்ளாத மற்றும் அதிகாரத்திற்காக இருட்டில் தத்தளிக்கும் குழுக்களுடன் இணைவதா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 07 - 1950



மறைவு 24 - 06 - 2024

## திருமதி இன்பலிங்கம் மகேஸ்வரி (பேபி)

யாழ். தீவகம் நாரந்தனை வடக்கு ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் குளோப் மில் றோட் பண்டாரிக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இன்பலிங்கம் மகேஸ்வரி அவர்கள் 24.06.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இன்பலிங்கம் (கிராம சேவையாளர் நாரந்தனை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், விஜிதா (வவுனியா), வினோதன் (ஜேர்மனி), வித்தியா (ஜேர்மனி), விந்தியா (ஜேர்மனி), விதுர்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்ணதாசன் (EDI - வவுனியா), வத்சலா (அஞ்சலகம், வவுனியா), வேங்கையின்மைந்தன் (ஜேர்மனி), தனேஸ்வரன் (ஜேர்மனி), நிரோஷினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஷ்விதா, திவிசனன், யதுமிகா, யனந்திகா, ஹரிஸ், விதுஷா, விகாஸ், விக்னேஸ், யனோசன், தக்சயா, சர்வின், தனிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராமலிங்கம், சிவநாதன், காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி, தற்பராதேவி (லண்டன்), யோகநாதன் (சுவிஸ்), லோகேஸ்வரி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமிர்தலிங்கம் (கனடா), சொர்ணலிங்கம் (கனடா), காலஞ்சென்ற அமிர்தவதி மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல.91/7, குளோப் மில் வீதி, பண்டாரிக்குளத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (27.06.2024) வியாழக்கிழமை மாலை 02.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சநாதன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


தொ.இல: 077 878 7574 (C-0684)

தகவல்: குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

சைவபரிபாலன சபையின் ஆயுள்கால உறுப்பினரும், முன்னாள் பரீட்சை செயலாளருமாகிய

## திரு. பொன்னுத்துரை கமலநாதன்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

தோற்றம் 13.05.1947 மறைவு 25.06.2024


(C-0683)

இல. 66 கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்

நிர்வாகம் சைவ பரிபாலன சபை

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சுப்பையா நாகேந்திரன்



பிறப்பென்று உண்டால்,
இறப்பென்பதுவும் திண்ணம்
தோன்றுவனயாவும் மறைவதும்
முடிவான முடிவு அதற்காய் மனம்
வெதும்புதலும் இயற்கை...
ஆறாண்டு ஏறிய போதும்
இறங்கவேயில்லை எம் துயர்
உம் பிரிவால் இன்றும் கலங்கி
நிற்கின்றோம். என்றென்றும் உங்கள்
ஆத்மா அமைதியுடன் உறங்கட்டும்.

மலர்வு 14.06.1938 உதிர்வு 03.07.2018

(114)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை நல்லுறவை சீர்குலைக்கும் பேராயர்

## தமிழ்நாடு சிவசேனா அமைப்பு குற்றச்சாட்டு

**(சென்னை)**

**இந்திய - இலங்கை நல்லுறவை சீர்குலைக்கும் விதமாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுவதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பின் மாநில செயல் தலைவர் க.சசிகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.**

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கான கப்பல், விமான போக்குவரத்துக்களை விரிவுபடுத்த இந்திய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து வருவதாக க.சசிகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பாலம் அமைக்கப்பட்டால் இலங்கையின் இறையாண்மைக்கு பங்கம் ஏற்படுமென கர்தினால் மல்கம் தெரிவித்த கருத்தை வன்மையாக கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையின் சுதந்திரமும் பறிபோகும் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டிருந்தார்.


வளமான, வலிமையான நாடாக இலங்கையை உருவாக்க வேண்டும் என்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்திய அரசாங்கம் பல கோடி நிதியை இலங்கை அரசாங்கத்திற்கு ஒதுக்கியுள்ளது.

இதேவேளை, இந்திய அரசாங்கத்தினால் இலங்கையில் 10 ஆயிரம் பேருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் இந்திய-இலங்கை நல்லுறவைச் சீர்குலைக்கும் விதமாக, இலங்கையின் கத்தோலிக்க ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுவதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது. (நி-6)

# நாடளாவிய ரீதியில் முடங்கிய கல்விச் செயற்பாடுகள்



(கொழும்பு)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்கங்களினால் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டுள்ள சுகயீன விடுமுறை போராட்டம் காரணமாக மாணவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, நேற்றுக் காலை பாடசாலைக்குச் சென்ற பெரும்பாலான மாணவர்கள், வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்

வேதன நிலுவையை வழங்கக் கோரியும் அதிபர், ஆசிரியர் சேவையில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் காணப்படுவதாகவும் தெரிவித்து நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் சுகயீன விடுமுறையை அறிவித்துத் தொழிற்சங்க நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மயக்க மருந்திற்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

சத்திரசிகிச்சைகளுக்கு அத்தியாவசியமாக பயன்படுத்தப்படும் லிடொகெயின் என்ற மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் பலவற்றில் இந்த ஊசி மருந்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

லிடோகெயின் என்ற மருந்து சத்திரசிகிச்சைகளின் போது மயக்க மருந்தாக பயன்படுத்தப்படுகின்றது.

இந்த மயக்க மருந்து வகை, அனைத்து சத்திரசிகிச்சைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் இந்த மருந்து கட்டாயமாக வைத்தியசாலைகளில் கையிருப்பில் இருக்க வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மருந்துப் பொருளுக்கான தட்டுப்பாடு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் நெருக்கடிகளை உருவாக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# கடவுச் சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் நீட்டிப்பு

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதிக்கு பின்னர் காலாவதியாகும் கடவுச்சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாகக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நீட்டிப்பு 10 வருடங்களை கடந்த பின்னரும் அதற்கு ஒரு வருட செல்லுபடியாகும் காலம் வழங்கப்படுமாயின் இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கப்படும் வரை மாத்திரமே அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

அதன்படி, நவம்பர் முதலாம் திகதி முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், சாதாரணக் கடவுச்சீட்டு வைத்திருப்போர் விரைவாக இலத்திரனியல் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# அதிபர்கள், ஆசிரியர்கள் மீது நீர்த்தாரை, கண்ணீர் புகைக்குண்டு வீச்சு




(கொழும்பு)

கொழும்பு லோட்டஸ் சுற்று வட்டத்திற்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த் தாரை பிரயோகம் செய்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் நேற்று புதன்கிழமை சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களின் பங்குபற்றுதலுடன் நேற்று முற்பகல் 11 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலய மட்ட போட்டிக்கு தெரிவான முக்கொம்பன்




கிளிநொச்சி பூநகரி கோட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் முக்கொம்பன் மகா வித்தியாலயம் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.



நேற்று முன்தினம் பூநகரி மத்திய கல்லூரி மைதானத்தில் குறித்த போட்டி இடம்பெற்றது.

இதில் 20 வயது பிரிவு மற்றும் 18 வயது பிரிவில் முதலாம் இடத்தையும் 16 வயது பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்று வலய மட்ட போட்டிகளுக்கு தெரிவாகி உள்ளனர். (ரி-6-350)

## கடின பந்து துடுப்பாட்ட போட்டி

## சம்பியனானது முழங்காவில் மகாவித்தியாலயம்




கிளிநொச்சி தெற்கு வலய பாடசாலைகளுக்கிடையிலான கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டியில் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

குறித்த துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியை எதிர்த்து முழங்காவில் மகா வித்தியாலய அணி மோதிய துடுப்பாட்டப் போட்டியில் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (ரி-6-350)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3152

Search for people, places and things

**ஷஸ்வந்**

பிரசர் அதிகமான விசில் அடிச்சி குறைச்சிடுது...



சரி நாமளும் பிரசர் அதிகமான விசில் அடிச்சி குறைக்கலாம்னு பார்த்தா விசில் அடிச்சா வரவே மாட்டிங்குது... அது இன்னும் பிரசர் அதிகமாகுது...

**புவி**

பட்டபகலில் வீடு புகுந்து திருடி இருக்க... ராஸ்க்கல்...



எல்லோரும் விடிய விடிய செல்லு பார்த்தா... நாங்க எப்படி தொழில் பண்றது ஏட்டய்யா...!

**மிதுஷா**

புருசன் சாப்பிட்ட பின் சாப்பிடுற மனைவியை கேட்கவில்லை



புருசன் சாப்பிடுற மாதிரி சமைக்கிற மனைவியை தான் கேட்கிறேன்

**பிரணவன்**

டேய் மாப்ள மரத்து மேல இருந்து பாத்தா engineering college பொண்ணுகளா தெரியிறாங்கடா....




கைய விட்டு பாரு மாப்ள medical college பொண்ணுகளா தெரிவாங்க...

**கோபிசாலினி**

நேரத்திற்கு சாப்பிட்டு நேரத்திற்கு தூங்கியது எல்லாம் பள்ளி பருவத்தில் மட்டும் தான்



**விதுசன்**



மனைவி: கணவன் மனைவி சண்டை என்றால் நாலு சுவருக்குள்ள தான் இருக்கனும்...
கணவன்: அப்ப தப்பித்து ஓடக் கூட எனக்கு உரிமை இல்லையா?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவைக்காய்ச்சல் எதிரொலி

# கோழி இறைச்சி, முட்டையை நன்கு சமைத்து உட்கொள்ளுங்கள்

## சுகாதார அமைச்சு அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் கோழி இறைச்சி சமைக்கும் போது அவதானம் செலுத்துமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கோழி மற்றும் முட்டையை சுகாதார முறைப்படி நன்கு சமைத்து உட்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

சமீபத்தில் இந்தியாவில் பரவிய பறவைக் காய்ச்சல் குறித்து சுகாதார அமைச்சகம் கவனம் செலுத்திய நிலையில் சுகாதார அமைச்சகத்தின் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தற்போது, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் பிரிவு H5 மற்றும் H7 விகாரங்கள் மற்றும் H9 இன்புளுவன்ஸா போன்றவற்றையும் கண்டறிய தேவையான PCR பரிசோதனை வசதிகளை நிறுவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறவைகள் மத்தியில் பரவும் பறவைக் காய்ச்சல், சில சமயங்களில் மனிதர்களையும் தாக்கும் என்பதால், பறவைகள் மற்றும் அவற்றின் கழிவுகளை தொடுவதை தவிர்க்கவும், அவதானமாக செயற்படவும் சுகாதார அமைச்சகம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பறவைகளையோ அவற்றின் எச்சங்களையோ தொடக்கூடாது. கோழிப்பண்ணைகளுக்கு செல்வதை தவிர்க்கவும்.

அத்துடன் தமது பிரதேசங்களில் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவைகள் காணப்பட்டால், அவை உடனடியாக உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (நி-6)

# கடன் மறுசீரமைப்பு

## எட்டப்பட்டது இறுதி உடன்பாடு



(கொழும்பு)

இருதரப்பு கடன் வழங்குநர்களின் உத்தியோகபூர்வ குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் 5.8 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை இலங்கை எட்டியுள்ளது.


அதன்படி இந்தியா, சீனா மற்றும் பாரிஸ் கிளப் ஒஃப் நேசன்ஸ் ஆகியவற்றின் உத்தியோகபூர்வ கடன் குழுவுடன் 5.8 பில்லியன் டொலர் கடனுக்கான இறுதி மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை இலங்கை எட்டியுள்ளது.

இந்த ஒப்பந்தம் நேற்று இறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி 5.8 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு இருதரப்பு கடனை மறுசீரமைப்பதற்கான இறுதி உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (நி-6)

## தேசிய மட்ட

# குண்டு போடுதல் போட்டி மிதுன்ராஜ் வெள்ளிப்பதக்கம்



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட குண்டு போடுதல் போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றி உள்ளார்.

102 ஆவது அகில இலங்கை தேசிய மட்ட ஆண்கள் பெண்களுக்கான தடகள போட்டிகள் தியகம மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்த யாழ் மாவட்ட வீரர் எஸ்.மிதுன்ராஜ் 14.94 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றி உள்ளார். (நி-6-90)

# தரம் குறைந்த மின்கம்பிகள் விற்பனை

## நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு

(கொழும்பு)

நாட்டில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த மின் கம்பிகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தர நிர்ணய சபையின் சான்றிதழ் இல்லாத இந்த மின் கம்பிகளில் உற்பத்தி நிறுவனத்தின் பெயர் கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பிரபல பண்டக் குறிகளுக்கு நிகரான பெயர்களைக் கொண்ட பெயர்களில் இவை விற்பனை செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் கம்பிகள் செப்புக் கம்பிகளினால் உற்பத்திசெய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் இந்த தரம் குறைந்த மின் கம்பிகளை உற்பத்தி செய்ய அலுமினியம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த மின் கம்பிகளை பயன்படுத்துவதனால் மின்சார இயந்திரங்கள் பழுதடைவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் தரம் குறைந்த இந்த மின் கம்பிகள் ஆயிரம் முதல் இரண்டாயிரம் ரூபாவிற்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், போலியான தரம் குறைந்த மின் கம்பி உற்பத்திகள் சந்தையில் விற்பனை செய்வது குறித்து இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபை விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இராசிபலன்

27.06.2024
ஆனி 13, வியாழக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.54 மணிவரை
சதயம் பிற்பகல் 2.05 மணிவரை

சுபநேரம் 7.25-8.55 மணி வரை
இராகுகாலம் 1.25-2.55 மணிவரை

சந்திராஷ்டமம்-
புநர்பூசம், பூசம்

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமையத் திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தொலைபேசியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டில் சிந்தனை மிக்க நாள், உதவிகள் செய்பவர்கள் உங்களை விட்டு விலகலாம்.




புண்ணிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் ஆர்வம் கூடும், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.




கல்யாணக் கனவுகள் நனவாகலாம், முன் கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், சொன்ன சொல்லை காப் பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வாழ்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




கனவுப் பலிதமுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய நண்பர்கள் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி பெறும்.




இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பயனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள்.




புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, சிந்தனை மிகுதியான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, கோரிக்கைகள் நிறைவு பெற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.




கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர். போசன ஆதாயம்




மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும்.




உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம், தூரதேசத்தில் இருந்து வரும் செய்திகள் ஆச்சரியம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

# இராணுவத்திடம் கையளித்த எம் உறவுகள் எங்கே?

## முல்லையில் உறவுகள் கவனயீர்ப்பு

**(முல்லைத்தீவு)**

**முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தில் நீதிகோரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி வேண்டும். எங்கே எங்கே உறவுகள் எங்கே?. இராணுவத்திடம் கையளித்த எங்களது உறவுகள் எங்கே?. வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி வேண்டாம் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும், கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா? காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள், கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே, உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள். உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6)

# கைதான 10 தமிழக மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மீது , ஆபத்தான முறையில் படகினை செலுத்தி கடற்படை மாலுமிக்கு மரணத்தை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களை எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, நேற்று முன்தினம் அதிகாலை செவ்வாய்க்கிழமை இரவு மீன் பிடியில் ஈடுபட்ட இந்திய படகொன்றினை வழிமறித்து படகில் இருந்தவர்களை கடற்படையினர் கைது செய்ய முற்பட்ட வேளை காங் கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும், கடற்படை சிறப்பு மாலுமியான குருநாகல் பகுதியைச் சேர்ந்த ரத்நாயக்க என்பவரே உயிரிழந்திருந்தார்.

அதனை அடுத்து மீன் பிடி படகில் இருந்த 10 மீனவர்களையும் கைது செய்த கடற்படையினர் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றதுடன் உயிரிழந்த மாலுமியின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை காங்கேசன் துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்ததை அடுத்து, அவர்களை யாழ். போதனா மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி முன் முற்படுத்திய பொலிஸார் சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையுடன் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய வேளை படகினை ஆபத்தான முறையில் செலுத்தி கடற்படை மாலுமிக்கு மரணத்தை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் மன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து 10 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (நி-6-33)

# மின்சாரம் தாக்கி இருவர் மருத்துவமனையில்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள தனியார் கம்பனி ஒன்றில் மின்சாரம் தாக்கியதில் இரு இளைஞர்கள் மீட்கப்பட்டு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

புதுக்குடியிருப்பு சந்தி பகுதியில் அமைந்துள்ள தனியார் கம்பனியில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் குறித்த கம்பனியின் தண்ணீர் தொட்டியினை சுத்திகரிக்க கட்டட மேல்பகுதிக்கு சென்றபோது மின்சாரம் தாக்கி மாடியில் இருந்து கீழே விழுந்துள்ளார். மேலே சென்றவரை காணவில்லை என அருகில் உள்ள பலசரக்குக் கடையில் பணிபுரியும் ஊழியர் கட்டட மேற்பகுதிக்கு சென்றபோது குறித்த இளைஞனுக்கும் மின்சாரம் தாக்கி மாடியிலிருந்து தாக்கி (தரையில்) கீழே வீசப்பட்டார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட இருவரும் சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-299)

# சந்நிதியிலிருந்து ஆரம்பமான கதிர்காம பாதயாத்திரை



(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமத்திற்கான ஆன்மீக பாத யாத்திரை நேற்று முன்தினம் தொண்டைமானாறு சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமான பாதயாத்திரை கிளிநொச்சியை நேற்று வந்தடைந்தது.

சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று வேல் கையளிக்கப்பட்டு யாத்திரை ஆரம்பமானது.

இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலய நிர்வாக பணிப்பாளர் மாசேல சமல் பெரேரா வடக்கு பணிப்பாளர் கே.காமினி, கிளிநொச்சி பணிப்பாளர் யாழ்ப்பாண உதவி பணிப்பாளர் திருமதி வினோதினி, இளைஞர் சேவைகள் உத்தியோகஸ்தர்கள், பிரதேசங்களின் இளைஞர் சம்மேளனங்களின் உறுப்பினர்கள் நிர்வாகிகள், பருத்தித்துறை, கரவெட்டி, பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-33-316)

# யாழ்., கிளி.மாவட்ட அரச அதிபர்கள் நியமனம்





(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச அதிபராக ம.பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக எஸ்.முரளிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் பொது நிர்வாக அமைச்சில் வைத்து குறித்த நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் மாவட்டச் செயலாளர் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட மேலதிக செயலாளராக ம.பிரதீபனும், கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளராக எஸ் முரளிதரன் ஆகியோர் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற பொன்னையா ரவிச்சந்திரனின் மணிவிழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணைய விளையாட்டுக்களால் உளவியல் பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்கள்

**(கொழும்பு) இணையம் அல்லது கணனி விளையாட்டுகளுக்கு கடுமையாக அடிமையாவதை மன நோயாக கருதுவதாக சிறப்பு மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.**

உலக சுகாதார நிறுவனம் தற்போது அதை மனநோயாக ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தில் கணனி விளையாட்டுகளுக்கு அடிமையாவது போதைக்கு அடிமையாவதைப் போன்றது.

தொடர்ந்து இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக பிள்ளைகள் இணையத்தில் இருந்தால் அவர்களுக்கு ஏற்படும் உளவியல் பாதிப்புகள் மிக அதிகம்.

இணையத்திற்கு கடுமையாக அடிமையாகி இருக்கும் பிள்ளைகள் இருந்தால் அவர்களை கைத் தொலைபேசியில் இருந்து முற்றாக நீக்குவது அவசியம்.

ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கைத்தொலைபேசி மற்றும் கணினி வழங்கக்கூடாது.

பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பெற்றோரின் கடுமையான கண்காணிப்பில் வழங்கப்பட வேண்டும். கையடக்கத் தொலைபேசி, கணனி போன்றவற்றுக்கு அதிகம் அடிமையா னால் முதல் நிலையிலேயே அவர்க ளைக் காப்பாற்ற வேண்டும்.

பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகும் சிறுவர்கள் வீடியோ கேம் களுக்கு அதிகம் அடிமையாகி வருவதாகவும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து வீடியோ கேம்களை பார்ப்பதன் மூலம் சிறுவர்களின் நடத்தை வன்முறையாக மாறுவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற செயல்களுக்கு அடிமையான பிள்ளைகள், பெற்றோர்களைக் கூட அவர்களை எதிரிகளாகவே பார்க் கின்றனர். இணையம் மற்றும் வீடியோ கேம்களில் இருந்து சிறுவர்களை காப்பாற்ற சிறப்பு அறிவியல் திட்டத்தை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L.சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/10409 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரடம்<br>கி.பா: 57<br>8 இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி. Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Accountant<br>தொ.இ: G/11319 |
| பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 16 1/2<br>4 இல் செவ்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: இலத்திரனியல் வியாபாரம் (Own)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/12514 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 15<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.Com, DO<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/14577 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:36 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:BA, DO<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/14185 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வர்த்தக கண்காட்சி


(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் ஏற் பாட்டில் இன்று வியாழக்கிழமை யாழ்.கலாசார மத்திய நிலைய வளாகத்தில் வர்த்தக கண் காட்சி இடம்பெறவுள்ளது.

கற்றாழை, சலவை, தோல் சார், கைவினைப் பொருட்கள், கடல்சார் உலர் உணவு மற்றும் மட்பாண்டம் போன்ற உற்பத்தி பொருட்களின் கண்காட்சி நிகழ்வு இடம் பெறும்.

குறித்த கண்காட்சி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா வவுனியா பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்



(வவுனியா)

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய ஆரம்பப் பிள்ளைப் பருவ டிப்ளோமா கற்கை நெறிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா பல்கலைக்கழகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீண்டகாலமாக வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு என தரமான கற்கை நெறி காணப்படாமை தொடர்பில் கல்வியாளர்களாலும் துறைசார் நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில், கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் வேண்டுகோளுக்கமைவாக, கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் நிதி அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் என்பன முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிப்பதற்காக முன்பள்ளி ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியிருந்தன.

இந்நிலையில் வவுனியா பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் டிப்ளோமா கற்கை நெறிக்கு உரிய தகைமையைக் கொண்டிருந்த 45 முன்பள்ளி ஆசிரியர்கள் எழுத்து மற்றும் நேர்முகத்தேர்வின் ஊடாக டிப்ளோமா கற்கை நெறிக்கு தகுதியுடையவர்களாக வவுனியா பல்கலைக் கழகத்தால் தெரிவாகியிருந் தனர்.


கல்வி அபிவிருத்திக் குழுமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ந.சச்சிதானந்தன், தனது உரையின் போது, தொடர்ந்தும் கல்வி அபிவிருத்திக் குழுமம், வடக்கு மாகாணத்தில் இருக்கும் முன்பள்ளிக் குழந்தைகள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிகள் தொடர்பிலான தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் கவனமெடுத்து செயலாற்றும் எனத் தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தினதும் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் முன்மாதிரியான செயற்பாடு வடக்கு மாகாணத்தில் முன்பள்ளித்துறையில் புதிய அத்தியாயம் என்றும் முன்பள்ளித்துறை வளர்ச்சிப் பாதையில் புதிய படிக்கல் என்றும் கல்வியாளர்கள் பலரும் பாராட்டுவதை அவதானிக்க முடிகின்றது என தெரிவித்தார். (நி-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவராக ராகுல்
## தமிழக வெற்றிக்கழகத் தலைவர் வாழ்த்து




(டில்லி)


மக்களவையின் எதிர்க் கட்சித் தலைவராக ராகுல் காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நடிகர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் "காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகளால் போட்டியின்றி ஒருமனதாக எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராகுல் காந்திக்கு வாழ்த்துக்கள். நாட்டு மக்களுக்கு சேவையாற்ற மனமார்ந்த வாழ்த்துக்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

18 ஆவது மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 99 தொகுதிகளில் வெற்றி பெற்று 10 ஆண்டுகளுக்கு பிறகு மக்களவையில் எதிர்க் கட்சி அந்தஸ்தை பெற்றுள்ளது.

காங்கிரஸ் அங்கம் வகித்த இந்தியா கூட்டணி நாடு முழுவதும் 234 தொகுதிகளில் வெற்றி பெற்று வலுவான கூட்டணியாக மக்களவையில் உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இந்தியப் பிரதமர் ரஷ்யா பயணம்



(டில்லி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ரஷ்யப் பயணம் ஜூலை மாதம் நடைபெறலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பயணத்தின் போது பிரதமர் மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் இடையே சந்திப்பு நடைபெற உள்ளதாகவும் அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ரஷ்ய அரசாங்கம் தயார் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த ஆண்டு மே மாதம் ரஷ்ய ஜானாதிபதி புடின் தொடர்ந்து ஐந்தாவது முறையாக பதவியேற்றார். அதே நேரத்தில் நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராக பதவியேற்றிருந்தார்

மேலும் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இந்திய விஜயத்தின் போது வருடாந்த இந்தியா-ரஷ்யா உச்சிமாநாட்டை நடத்த இருநாடுகளும் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அதிக வெப்பத்தால் உருகிய
## ஆபிரகாம் லிங்கனின் மெழுகுசிலை

(வோஷிங்டன்)

வோஷிங்டனில் உள்ள அமெரிக்கத் தலைவர் ஆபிரகாம் லிங்கனின் ஆறு அடி உயர மெழுகு சிலை உருகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



கடந்த சனிக்கிழமை வடமேற்கு வோஷிங்டனில் வெப்பநிலை 37.7 டிகிரி செல்சியஸாக உயர்ந்ததால் லிங்கன் நினைவகத்தைப் பிரதிபலிக்கும் மெழுகு சிலை உருகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அமெரிக்காவின் பல பகுதிகளில் தீவிர வெப்பநிலை ஏற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வானிலை முன்னறிவிப்பாளர்கள் மத்திய மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் வசிக்கும் மக்களை இந்த மாதத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஒவ்வொரு வருடமும்
# மது, கஞ்சாவினால்
## 32 லட்சம் பேர் உயிரிழப்பு
### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(ஜெனீவா)

உலகம் முழுவதும் மது மற்றும் போதைப் பொருட்களால் ஒவ்வொரு வருடமும் 32 லட்சம் மக்கள் இறக்கின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.


மது அருந்துவதால் மட்டும் உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் 26 லட்சம் மக்கள் மரணிக்கின்றனர்.

போதைப் பொருட்களால் உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் 6 லட்சம் மக்கள் இறக்கின்றனர்.

மக்கள் குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் அதிகமானோர் மதுவினால் உயிரிழக்கின்றனர். மக்கள் அதிக வருமானம் பெறும் நாடுகளில் குறைவான அளவிலேயே மதுவினால் ஏற்படும் உயிரிழப்புகள் உள்ளது.

2019 ஆம் ஆண்டு எடுத்த தரவுகளின் அடிப்படையில் உலக சுகாதார நிறுவனம் இதை தெரிவித்துள்ளது. (நி-6)

# நேட்டோவின் புதிய செயலாளராக
# நெதர்லாந்து பிரதமர் நியமனம்



(நெதர்லாந்து)

அமெரிக்கா உள்ளிட்ட 32 நாடுகளை உள்ளடக்கிய நேட்டோ அமைப்பு மிகப்பெரிய பாதுகாப்பான அமைப்பாக கருதப்படுகிறது.

இந்த 32 நாடுகளும் தங்களுக்குள் ஆயுதங்களை பரிமாறிக் கொள்ள முடியும். இந்த 32 நாடுகளில் ஒரு நாடு மீது இந்த அமைப்பில் இல்லாத நாடு தாக்குதல் நடத்தினால் அது ஒட்டுமொத்தமாக நேட்டோ நாடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கருதப்படும். இந்த பாதுகாப்பான நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளராக நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே நியமிக்கப்பட்டுள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிக்கலான நேரத்தில் மார்க் ரூட்டே பொதுச் செயலாளர் பதவியை ஏற்கவுள்ளார்.

ஜூலை 9 மற்றும் 11ஆம் திகதி வோஷிங்டனில் நடைபெறும் மாநாட்டின்போது அமெரிக்க ஜனாதிபதி புடின் மற்றும் மற்ற நாட்டின் ஜனாதிபதிகள் அதிகாரபூர்வமாக அவரை வரவேற்கவுள்ளனர்.

தற்போது பொதுச் செயலாளராக இருக்கும் நோர்வேயின் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் பதவிக்காலம் ஓகஸ்ட் 31ஆம் திகதி நிறைவடைந்ததும், ஒக்டோபர் முதலாம் திகதி மார்க் ரூட்டே பொதுச் செயலாளராக பதவி ஏற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் 10 வருடத்திற்கு மேல் இந்த பதவியில் நீடித்தார். உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022 இல் படையெடுத்த போது அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட ரஷ்ய அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் பிடியாணை



**(நெதர்லாந்து)**

**உக்ரைனில் இடம்பெற்ற யுத்த குற்றங்களிற்காக ரஷ்யாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் தற்போதைய இராணுவ பிரதானிக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணையை பிறப்பித்துள்ளது.**



உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பின் போது உக்ரைனின் சிவில் உட்கட்டமைப்பு மற்றும் மின்நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிற்காகவே ரஷ்ய அதிகாரிகளிற்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் சேர்ஜிசொய்குவும் மற்றும் பாதுகாப்பு பிரதானி வலெரி ஜெராசிமோவும் பொதுமக்கள் இலக்குகளைத் தாக்கியமை, பொதுமக்களிற்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியமை, சேதப்படுத்தியமை மூலம் யுத்த குற்றங்களில் ஈடுபட்டனர் என ஐசிசி தெரிவித்துள்ளது.

அவர்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டனர் எனவும் சர்வதேச நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

ஹேக் நீதிமன்றம் அவர்களிற்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ள போதிலும் அவர்கள் ரஷ்யாவில் இருப்பதால் கைதுசெய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளன. ரஷ்யா ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடவில்லை என கார்டியன் தெரிவித்துள்ளது. (நி-6)

# பைடன்-ட்ரம்ப் நேருக்கு நேர் விவாதம்





(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி வேட்பாளர்களான தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் இன்று ஜோர்ஜியா தலைநகர் அட்லாண்டாவில் விவாதத்தில் ஈடுபடவுள்ளனர்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும், அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பும் போட்டியிடவுள்ளனர்.

இத்தேர்தலின் முக்கிய அம்சமாக, வேட்பாளர்கள் பல்வேறு கட்டங்களில் நேருக்கு நேர் விவாதிப்பது வழக்கம். அந்த வகையில் முதலாவது நேரடி விவாத நிகழ்ச்சி இன்று நடைபெற உள்ளது.

இதன்போது குடியேற்றம், பொருளாதாரம் மற்றும் பணவீக்கம் தொடர்பான விவகாரங்கள், ரஷ்யா உக்ரைன் போர் மற்றும் காசாவில் இஸ்ரேலின் போர் பற்றிய கேள்விகள், சீன விவகாரம் போன்றவை விவாதத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தம் 90 நிமிடம் இவ் விவாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கென்யாவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்



(நைரோபி)

கென்யா பாராளுமன்றத்தில் சர்ச்சைக்குரிய வகையிலான நிதி சட்டமூலம் தாக்கல் செய்யப்படுவதற்கு எதிராக போராட்டம் வெடித்தது.

கடந்த சில தினங்களாக போராட்டம் நடைபெற்று வந்த நிலையில் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் இந்த சட்ட மூலத்திற்கு ஆதரவு தெரிவிக்கக் கூடாது என பாராளுமன்றத்திற்கு வெளியில் போராட்டக்காரர்கள் போராட்டம் நடத்தினர்.

திடீரென ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் பாராளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்தனர்.

அப்போது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் கோபம் அடைந்த போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்தின் ஒரு பகுதிக்கு தீ வைத்தனர். இதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

பாராளுமன்றத்திற்குள் இருந்த உறுப்பினர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அலி சப்ரி ஜப்பான் விஜயம்



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜூலை 1 ஆம் திகதி ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவாவின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த விஜயத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் தனது ஜப்பானிய பிரதியமைச்சருடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் என்றும் அமைச்சர் அலி சப்ரி ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலாளர் யோஷிமாசா ஹயாஷி உட்பட பல முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# தக்காளி விலை உச்சம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை அதி கரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தைகள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்களில் ஒரு கிலோகிராம் தக்காளியின் விலை 900 முதல் 1,000 ரூபாயாக அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், முருங்கைக்காய் 1000 ரூபாவிற்கு மேலாகவும், கிழங்கு ஒரு கிலோக்கிராம் 900 - 1,000 ரூபாவாகவும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், ஒரு கிலோக்கிராம் கறிமிளகாயின் சில்லறை விலை 900 ரூபாயாகவும் போஞ்சியின் விலை 800 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 380 | 350 | 200-350 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 200 | 100-150 | 200 |
| தக்காளி | 700 | 650 | 700 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 160 | 140 | 100-130 | 200 |
| கோவா | 300 | 320 | 280 | 250 | 300 |
| கரட் | 350 | 550 | 550 | 400 | 600 |
| பூசணி | 180 | 200 | 180 | 150 | 200 |
| புடோல் | 160 | 300 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 180 | 200 | 140 | 120-170 | 240 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 350 | 300-550 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 220 |
| பாகற்காய் | 1200 | 900 | 1200 | 900 | 1000 |
| வெண்டக்காய் | 240 | 250 | 180 | 250 | 350 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 200 | 300 | 150 | 100-200 | 200 |
| லீக்ஸ் | 650 | 700 | 700 | 400 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 700 | 500 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1500 | 2000 | 1600 | 1300 | 1000 |
| போஞ்சி | 800 | 800 | 800 | 400 | 1200 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 350 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 | 100-120 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 1200 | 900-1100 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 300 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 140 | 250 | 200 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 160 | 120 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 165



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கவிஞர்

என்ன சார் கொஞ்ச நாளாக இந்த பக்கமே உங்களைப் பார்க்க முடிவதில்லை? என்றேன் ஒருத்தரைப் பார்த்து. இப்போது தான் ரொம்ப பிஸி சார்! கதை, கட்டுரை, நாடகம் எல்லாம் நிறைய எழுதுகின்றேன் என்றார் அவர். அப்படி என்றால் இப்போது எதுக்கு சார் இந்தப் பக்கமாக வந்தீர்கள் என்று கேட்டேன். என்னுடைய கவிதை மிகவும் நன்றாக இருக்கு என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

அதனாலே என் பேருக்கு முன்னாலே போட்டுக்கொள்வதற்கு ஒரு பட்டம் வேண்டும்! என்னார். என்னிடம் கைவசம் எதுவும் இல்லையே என்றேன். அது எனக்கு தெரியும் சார்! ஆனாலும் உங்களிடம் ஒரு யோசனை கேட்கலாம் என்று வந்தேன். அது தான் தாராளமாக சொல்லுவீர்களே என்றார். என்ன யோசனை என்றேன். என்னுடைய பேருக்கு முன்னாடி கவிஞர் என்று போட்டுக் கொள்ளலாமா? இல்லை பண்டிதர் என்று கொள்ளலாமா என்று கேட்டார். நீங்கள் எழுதிய சிலவற்றை படித்து பார்த்து விட்டுத் தான் இதற்கு பதில் சொல்ல முடியும் என்றேன்.

கொண்டு வந்திருக்கிறேன் அதையும் கையோடு! இந்தாருங்கள். முதலிலே இதைப் படியுங்கள் என்று சொல்லி ஒரு காகிதத்தை நீட்டினார். அதை வாங்கி கையிலே வைத்து விட்டு இதை நான் படிப்பதற்கு முன்பு கவிஞர் என்றால் யார்? பண்டிதர் என்றால் யார்? என்பதனை புரிந்து கொள்வதற்கு ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள் என ஆரம்பித்தேன். அவரும் மிகவும் அடக்கமாக எதிரிலே உட்கார்ந்து அதனை கேட்க ஆரம்பித்தார்.

வடமொழியிலே பவபூதி என்று ஒரு மகாகவி இருந்தார். அவர் ரொம்ப பெரிய அறிவாளி, பக்திமான். அவரோட அறிவையும் பக்தியையும் பார்த்து விட்டு சரஸ்வதி தேவியே ரொம்ப ஆச்சரியப்பட்டு போனார்களாம். அதுமட்டுமில்லை அவர்களே ஒரு சிறுமியாக வந்து அவருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தார்களாம். என்று ஒரு கதை உண்டு. அப்படி என்றால் பார்த்து கொள்ளுங்களேன்.

ஒரு நாள் இந்த பவபூதியைப் பார்ப்பதற்காக இரண்டு பேர் வந்தார்கள். வந்தவர்கள் யார் என்று நினைக்கின்றீர்கள். ஒருத்தர் காளிதாசர். இன்னொருவர் தண்டியடிகள். இவர்கள் இரண்டு பேரும் அங்கு வந்த நேரத்திலே பவபூதி பூஜையில் இருந்தார். வாசலிலே அந்த சிறுமி மட்டும் நின்று கொண்டிருந்தார். இவர்களை பார்த்வுடன் வாருங்கள் கொஞ்ச நேரம் இப்படி உட்காருங்கள். அவர் பூஜையில் இருக்கின்றார். வந்து விடுவார். அப்படி என்றால் சரி என்று சொலி விட்டு இரண்டு பேரும் அங்கு உட்கார்ந்தார்கள்.

தண்டியடிகள் அந்த சிறுமியை பார்த்து பூரண சந்திரன் போன்ற முகத்தை உடையவளே கொஞ்சம் பாக்குத் தூள் கொண்டுவா? என்றார். அடுத்த படியாக காளிதாசன் அந்த சிறுமியைப் பார்த்து காதளவு நீண்ட கண்களை உடைய பெண்ணே! பொன்னிறமான வெற்றிலையையும் கொண்டுவா என்றார். இதைக் கேட்ட அந்த சிறிய பெண் சரி என்று சொல்லி விட்டு உள்ளே போனாள். வெற்றிலையையும் பாக்கையும் எடுத்து கொண்டு வந்து கொண்டிருந்தாள்.

வழியிலே பவபூதி பூஜையை முடித்து விட்டு நின்று கொண்டிருந்தார். வெற்றிலை பாக்குடன் சிறுமி போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தார். யாருக்கம்மா வெற்றிலை, பாக்கு எடுத்து கொண்டு போகின்றாய் என்று கேட்டார். அதற்கு அந்த சிறுமி கவிஞராகிய காளிதாசனுக்கும் பண்டிதராகிய தண்டியடிகளுக்கும் கொண்டு போகிறேன் என்றார். அது சரிம்மா காளிதாசனை கவிஞர் என்றும் தண்டியைப் பண்டிதர் என்றும் சொல்கின்றாயே ஏன்? என்று கேட்டார். இப்போது இந்தச் சிறுமி இதற்கு விளக்கம் கொடுக்கிறார். காளிதாசர் என்னை காதளவு நீண்ட கண்களுடையவளே என்று வர்ணித்தார்.

உனக்கு நீண்ட கண்கள் இருக்கின்றது அதனால் பொன்னிறமான வெற்றிலையை தேடி எடுத்து கொண்டு வா என அவர் சொன்னார். பயனற்ற வர்ணனை ஏதும் இல்லாமலே சொற்களை காரண காரியத்திற்கு ஏற்ற மாதிரி மாற்றியமைப்பது தான் கவிஞன். ஆனால் காரண காரியத்தை நோக்காமல் வெறும் வர்ணனையைக் கையாளுபவன் பண்டிதன் . தண்டி என்னை பாக்குத் தூள் கேட்டார். என்னை பூரணசந்திரன் போன்ற முகத்தை யுடையவளே என்று வர்ணித்தார்.

இந்த வர்ணனைக்கும் பாக்குத் தூள் கொண்டு வருவதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. இது வெறும் சொல் அலங்காரம். அதனாலே தான் காளிதாசனை கவிஞன் என்று சொன்னேன். தண்டியை பண்டிதன் என்று சொன்னேன்! இது தான் அந்த சிறுமியோட பதில் இந்த கதையை எதிரிலே இருப்பவரிடம் சொல்லி விட்டு இந்த அடிப்படையிலே தான் நீங்கள் கவிஞரா பண்டிதரா என்பதனை முடிவு செய்யப்போகின்றேன் என்பதையும் சொல்லி அவருடைய படைப்பை வாசித்து பார்த்தேன். அவர் கொடுத்த முதல் காகிதத்தைப் படித்து பார்த்து இந்தக் கட்டுரை மிகவும் நன்றாகத் தான் இருக்கிறது என்று ஆரம்பித்தேன். அதுக்குள்ளே அவர் அவசரமாக குறுக்கிட்டு சார் அது கட்டுரை இல்லை சார் கவிதை! அப்படினார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் தெளிவூட்டல்

(தருமபுரம்)

அந்தவகையில் உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான விளக்கத்தினை வழங்கவும் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவதற்கான கலந் துரையாடல் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நான்கு அமர்வுகளாக இடம்பெற்றது.

1983- 2009 ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிய பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்படும் ஒரு சுயாதீனமான நிறுவனமாக உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நிறுவ திட்டமிடப் பட்டுள்ளது.

உத்தேச ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் முறையாக தகவல்களைத் திரட்டல், வன்முறைகளின் போது நடந்த விடயங்களை அறிக்கையிடல், கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க பரிந்துரை வழங்குதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பாரபட்சமற்ற அமைப்பாகப்பயன் படுத்துவது இதன்நோக்க மாகும்.

இந்த சந்திப்புக்களில் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக் கால செயலகத்தின் பணிப் பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்ச, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி (கொள்கை) கலாநிதி சி. வை. தங்கராசா மற்றும் ஆசிப் போற்ட், இணைப் பாளர் சரத் கொத்தலாவல, சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி(சட்டங்கள்) வை.எல். லொக்குநாரங்கொட, நிறைவேற்று அதிகாரி(பொது உறவுகள்) சௌமியா விக்ரமசிங்க மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (நி-6-316)

# எல்லை தாண்டி மீன்பிடியில் மீனவர்கள் ஈடுபட வேண்டாம்

## ராமேஸ்வர மீன்வளத்துறையினர் அறிவிப்பு

(மன்னார்)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடந்த ஒரு வாரத்தில் 30இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் அடுத்தடுத்து இலங்கை கடற்படையால்கைது செய்யப்பட்டு வருவதன் எதிரொலியால் ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி செல்ல வேண்டாம் எனவும், உயிர் காக்கும் உபகரணங்களை கையில் வைத்துக் கொள்ளுமாறு ராமேஸ்வரம் மீன் வளத் துறை அதிகாரிகள் ஒலி பெருக்கி மூலமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மீன் பிடிக்கச் சென்ற 22 ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படை சிறை பிடித்ததை கண்டித்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நேற்று வேலை நிறுத்தப்போராட்டம் முடிந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்களுக்கு ராமேஸ்வரம் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அப்துல் காதர் ஜெய் லானி உத்தரவின் பேரில் மீன் வளத் துறை அதிகாரிகள் ஒலி பெருக்கி வாயிலாக "இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிக்க செல்லக்கூடாது" உயிர் காக்கும் உபகரணங்களை வைத்திருக்க வேண்டும், மீனவர் அடையாள அட்டை மற்றும் மீன்பிடி படகின் உரிய ஆவணங்களை வைத்துக் கொள்ளுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-285)

# உப உணவுப் பயிர்ச்செய்கை முன்னெடுக்க அனுமதி வழங்குங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச் செய்கைத் திட்டம் ஒன்றினை தொடங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறுபோக நெற்செய்கை தொடங்கி தற்போது அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் குளத்தின் நீர் தற்போது திறந்து விடப்பட்டிருக்கும் நிலையில் குளத்தின் நீரினை வீண் விரயம் செய்யாமல் குறைந்தது 50 ஏக்கரிலாவது உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கான அனுமதியினை பூநகரி பிர தேச செயலாளர்வழங்க வேண்டும்.

ஏற்கனவே குடமுருட்டிக் குளம் ஊடாக காரையம் பிட்டிக் குளத்திற்கு நீர் வழங்கப்படும் நிலையில் உப உணவுப் பயிர்ச் செய்கைக்கு குளத்தில் இருந்து நீர் வழங்க அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

# வீதியை புனரமைக்கக்கோரி

## ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மீசாலை வடக்கு தட்டாங்குளம் வீதியினை புனரமைத்து தருமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் குறித்த வீதியினை பயன்படுத்தும் 5 கிராமசேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


50 வருடங்களாக புனரமைக்கப்படாத இந்த வீதியால் சுமார் 1000 இற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்துகின்ற போதிலும் மிக மோசமான நிலையில் வீதி பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஐவர் ஆளுனரின் செயலாளரை சந்தித்து ஆளுநரின் ஊடாக ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது. (நி-6-33)

# இன்னும் எத்தனை காலமோ? கவிதை நூல்

## ஒரு விமர்சனப் பார்வை

கவிஞர் இரா.ஜெயக்குமார் எழுதிய "இன்னும் எத்தனை காலமோ? கவிதை நூல் அண்மையில் சமுதாயத்தின் கரங்களில் மழலையாகத் தவழ்ந்தது.




இந்நூலில் 82 கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. "தமிழே நீ வாழியவே" என்று தொடங்கி சமூக அவலங்கள் பலவற்றைத் தொட்டு, "இன்னும் எத்தனை காலமோ? என்ற ஏக்கத்தோடு நிறைவு செய்துள்ளார். இந்நூலை நோக்கின், சமூகத்தின் மீது கொண்ட கரிசனை புரியும்.

"வலிகள் சுமந்து வதங்கிய இனத்தில்
வலிமை பெருக்கி வதங்கள் புரிந்திடு
துணிவின் ஒளியால் துயரம் விரட்டு
பணிவு கொண்டே பணிகள் பரப்பு"

என்ற வரிகளுக்கூடாக, இளையோர் ஒவ்வொருவரையும் எழுச்சி கொள்ளச் செய்துள்ளார்.

"தூர நோக்கில்லாத
துயரப் பெற்றோர்கள்
பணங்கறக்க வென்றே
படிப்பை நிறுத்துவிப்பார்..."

என்று கட்டாயக் கல்வியும் கட்டறுத்த மாணவரும் என்ற தலைப்பில் பெற்றோருக்குச் சாட்டையடி கொடுத்துள்ளார்.

"தேடிப் போகும் காதல்
தேளாய் கொட்டக் கூடும்
காதலின் பெயரைச் சொல்லி
கற்பைச் கலைத்த பின்னர்
கை கழுவி நழுவுகின்ற
கயவர்கள் கூட்டம் உண்டு..."

என்று காதலுக்கு ஒரு கவிதை எழுதியுள்ளார்.

"கோண்டாவில் பதியினிலே
கோமான் சிவாஜி அடிக்கல்லிட
செம்மனச் செல்வி தங்கம்மா
திறந்து வைத்த பள்ளியிது...
ஆண்டுகள் இருபது
நீண்டு நிலை பெற்ற
சிவபூமி மனவிருத்திப்பள்ளி
தாங்குக தங்கமாம் சிறுவர்களை..."

என்று சிவபூமிக்கு நன்றி பகருகிறார். நன்றி நிறை மனத்தோடு!

இன்றைய சிறுவர் உலகில் நிறைந்த வேதனையின் அவலங்களை இப்படி எழுதியுள்ளார்.

"தடைகள் பல தாண்டி
தடம் பதிக்க வேண்டாமோ?
நாளைய தலைவர்களை
நாம் செதுக்க வேண்டாமோ?
குருத்துகளைக் கருக்கவென
விரித்த வலைகள் பல
நச்சுச் சூழலிடை
நம்பிஞ்சுகள் வளருகிறார்...."

என்று தனது ஆதங்கத்தைக் கொட்டியுள்ளார்.

"எரிந்தது நூலகமல்ல
தமிழர் தம் ஏணிகளே
தமிழ்ப் பெரு விருட்சத்தின்
உரிமைக்கு உயிரூட்டும்
தொன்மை மிகு வேர்கள்..."

என்று கூறி

"எரிந்தது தமிழர் நூலகமல்ல
பஞ்ச சீலக் கொள்கைகளை
பாருக்கே படைத்தளித்த
போதி மாதவன் போதனைகளே..."

என்று உணர்வின் வலிகளை உயிர்மையாகப் படைத்திருக்கிறார்.

இவருடைய கவிதைகள் கடந்து போன பலவற்றை நமக்கு மீட்டுத் தருகின்றன. எதிர்பாராத இடப்பெயர்வு ஒன்றில் நாம் சங்கமமான அந்தத் துயரினை

"இங்கிருந்து புறப்படுவீர்
கையில் கிடைத்ததுடன்
கைதடி கடந்திடுவீர்
வலிகாமம் கடந்திடுவீர்
வலிகள் சுமந்தபடி..."

எப்படி என்றால்,

"பலாலியில் கிளம்பும்
பராலைற்றுக்கள் மிரட்ட
கையிலே கிடைத்திட்ட
காகிதச் சான்றிதழ்களை
நாய் பூனை கோழிகளை...
நாம்வளர்த்த மந்தைகளை...
நலம் காக்க வழியின்றி..."

என்றும்,

"தாகத்தால் தவிக்கையில்
தண்ணீர் தந்திடவும்
தயங்கினர் அயலோர்
முடிவற்ற பேரணி கண்டு...."

என வேதனையின் வலிகளை, மாறாத துயர்களை தந்திருக்கிறார். இன்னும், "வாழப்பிறந்தவர்கள்" என்ற கவிதையில்,

இவர் பெரும்பாலும் வலம்புரி, உதயன், தினகரன் முதலிய பத்திரிகைகளில் படைப்புக்களைப் படைத்துள்ளார்.

"எம் சமூக அவலங்களை,
போதைப் பொருள் பெருகி
பாதைகளை மாற்றுதலும்
அரசைத் துறந்த மகான்
அரசடியில் குந்துதலும்..."

எனத் தொடங்கி, இன்று நம்மை வருத்தும் கொடுமைகளை

"ஊழலும் இலஞ்சமுமே
சட்டவலை பின்னுதலும்
கோடரிக் காம்புகளும்...
இன்னும் இன்னும்
இப்படி எத்தனையோ?"

என்று நிறைவு செய்துள்ளார். ஆம் இன்னும் இப்படி எத்தனையோ? என்ற விடையில்லா வினாக்களை அனைத்து நெஞ்சங்களில் படைத்து மகிழ்வு கொள்கிறார்.

சமூகத்தின் இன்றைய யதார்த்தம் தெட்டத்தெளிவாக தற்துணிவோடு படைக்கப்பட்டுள்ளது. வாழ்த்துக்களோடு 'இன்னும் தொடர்க' என்ற வேண்டுதலையும் முன் வைக்கின்றேன்.

உடுவிலூர் கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 518





இளைய பிராட்டி குந்தவை வந்தியத்தேவன் என்ற வாலிபனிடம் இரகசிய ஓலை கொடுத்து இளவரசருக்கு அனுப்பினாள். அந்த முரட்டு வாலிபனைக் காப்பாற்றுவதற்காக அல்லவோ நான் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் இளவரசர் அலைகடலில் குதித்தார்? ஆகையால் இளவரசரின் மரணத்துக்குக் குந்தவை காரணம் என்று சொனனேன்" என்றான் பார்த்திபேந்திரன்.

பழுவேட்டரையர் தம் அவசர புத்தியைக் குறித்துச் சிறிது வெட்கம் அடைந்தார். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "வெறுமனே மூடி மறைக்கப் பார்க்காதே! இளவரசரின் அகால மரணத்துக்கு நீயும் பொறுப்பாளிதான். அத்தகைய சுழல் காற்று அடித்த சமயத்தில் அவர் கப்பலிலிருந்து படகில் இறங்குவதற்கு நீ எப்படிச் சம்மதித்தாய்? தொலைந்து போ! என் கண் முன்னால் நிற்காதே!" என்றார்.

நந்தினி குறுக்கிட்டு, "நாதா! இவரையும் தஞ்சாவூர் அழைத்துப் போவது நல்லதல்லவா? நடந்தது நடந்தபடி இவரே சக்கரவர்த்தியிடம் தெரிவிப்பது நலம் அல்லவா? இல்லாவிட்டால், ஏற்கனவே நம் பேரில் குற்றம் சொல்லக் காத்திருப்பவர்கள் இதையும் சேர்த்துக் கொள்வார்களே? நாம்தான் இளவரசரைக் கடலில் மூழ்கடித்து விட்டோம் என்று கூடக் கூசாமல் பழி சொல்வார்களே!" என்றாள்.

"சொன்னால் சொல்லட்டும்! அதற்கெல்லாம் நான் அஞ்சியவன் அல்ல. சொல்கிறவன் நாக்கைத் துண்டிக்கச் செய்வேன். ஆனால் இவன் நம்மோடு வருவதும் ஒரு காரியத்துக்கு நல்லது தான். பார்த்திபேந்திரா! ஏன் அங்குமிங்கும் பார்த்து விழிக்கிறாய்? தப்பி ஓடலாம் என்று பார்க்கிறாயா?" என்று கூறிச் சற்றுத் தூரத்தில் நின்ற வீரர்களைக் கைகாட்டி அழைத்தார். நாலு பேர் விரைந்து வந்தார்கள்.

"இவனைப் பிடித்துக் கட்டுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

வீரர்கள் நாலுபேரும் பார்த்திபேந்திரனை நெருங்கினார்கள். அருகில் நெருங்கி வரும் வரையில் அவன் சும்மாயிருந்தான். பிறகு ஒரு நொடிப்பொழுதில் தன் கைவரிசையைக் காண்பித்தான். நாலு வீரர்களும் நாலு பக்கம் போய் விழுந்தார்கள்.

"ஐயா! என்னைக் கட்டித் தளையிடுவதாயிருந்தால் மற்றவர்களை அனுப்ப வேண்டாம். வீராதி வீரரும் முப்பத்தாறு போர்க்களங்களில் அறுபத்து நாலு காயங்களை அடைந்தவருமான பெரிய பழுவேட்டரையர் கையினால் கட்டுப்படுவதற்கு நான் சித்தமாயிருக்கிறேன். மற்றவர்களை என் அருகிலும் நெருங்க விடமாட்டேன்!" என்றான்.

பழுவேட்டரையர் முகத்தில் சிறிது மலர்ச்சி காணப்பட்டது. "நீ வீர பல்லவ குலத்தில் பிறந்த வீரன், சந்தேகமில்லை. எங்களுடன் தஞ்சாவூருக்கு வந்துவிட்டுப் போகச் சம்மதம் என்றால் சொல், உன்னைக் கட்ட வேண்டிய அவசியமில்லை" என்றார்.

"அதுதான் என் விருப்பம் சக்கரவர்த்தியை நேரில் பார்த்து, நடந்தது நடந்தபடி சொல்ல விரும்புகிறேன். என் பேரிலும் வீண் பழி ஏற்படக் கூடாதல்லவா?" என்றான் பார்த்திபேந்திரன்.

"அப்படியானால், உடனே புறப்படுவோம்" என்றார் பழுவேட்டரையர்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்


(நேற்றைய தொடர்ச்சி)

## சிறந்த ஆயுதம்

வாளினாலோ, ஈட்டியினாலோ யானையை ஒன்றும் செய்யமுடியாது என்று தெரிந்தது. ஆனால் கோழையைப் போல பயந்து ஓடவும் அவருடைய தன்மானம் இடம் தரவில்லை.

எல்லாரும் செய்வதறியாது செயலற்று நிற்க, பீர்பால் சட்டென்று அங்கிருந்த ஒரு பூனையைப் பிடித்து யானையின் முதுகில் வீசியெறிந்தார். யானையின் முதுகில் விழுந்ததால் மிரண்ட பூனை, தன் நகங்களினால் யானையைப் பிறாண்டியது.

வலி பொறுக்க முடியாத யானை, தன் தும்பிக் கையினால் பூனையைப் பிடிக்க முயல, அது



தப்பித்துக் கீழேயிறங்கி ஓடியது. யானையின் கோபம் முழுவதும் பூனையின்பால் திரும்ப, அது பூனையைத் துரத்திக் கொண்டே எதிர் திசையில் ஓடியது.

தனது பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு யானையினால் விரைவாக ஓட முடியவில்லை. போக்குக் காட்டிக் கொண்டே ஓடிய பூனை, சாலையோரப் புதர்களின் உள்ளே மறைய, யானை புதர்களுக்குள் புகுந்து அதைத் தேடியது.

இவ்வாறு, யானையின் கவனம் திசை திரும்ப, அக்பரும் மற்றவர்களும் யானையிடம் சிக்காமல் தப்பித்தனர்.

சற்றுநேரம் சிலையாய் நின்ற அக்பர் தெளிவடைந்தவுடன் பீர்பாலைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"பீர்பால்! சபாஷ்! அறிவுதான் சிறந்த ஆயு தம் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டாய்! சூழ்நிலைக்கு ஏற்றவாறு மூளையைப் பயன்படுத்தி சிந்தித்து செயற்படுவதே சாலச் சிறந்தது என்ற உண்மையை எங்களுக்குப் புரிய வைத்து விட்டாய்! நீ சொன்னதே சரி! உன்னைப் போன்ற அறிவாளி அருகிலிருந்தால் எந்த அபாயத்தையும் எதிர் கொள்ளலாம்!" என்று மனதாரப் பாராட்டினார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள். – டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழக மீனவச் சகோதரர்கள் நீதியாக நடந்து கொள்ள வேண்டும்

இலங்கை – இந்தியக் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி மீன் பிடிக்கின்ற செயல் மிகுந்த சிக்கல்களையும் உயிரிழப்புக் களையும் ஏற்படுத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் கூட (25) எல்லை மீறிய தமிழக மீனவர்களைக் கைது செய்ய முற் பட்டபோது, இலங்கைக் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் எந்தப் பக்கத் தில் நடந்தாலும் அஃது நியாயப்படுத்தக் கூடியதன்று.

மாறாக இவ்வாறு கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்த சம்பவமானது, எதிர்காலத்தில் எல்லை மீறுகின்ற தமிழக மீனவர்களைக் கைது செய்யாமல் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றதான நிலைமையை ஏற்படுத்திவிடும்.

தவிர, தமிழக மீனவர்கள் கடல் எல்லை தாண்டி வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவ தால், எங்கள் கடற்றொழிலாளர்கள் கடும் நட்டத்தை எதிர்கொள்வதுடன், கடும் பாதிப்பை யும் அனுபவிக்கின்றனர்.

சில வேளைகளில் இரு தரப்பும் கடலில் முரண்படுகின்ற துர்ப்பாக்கிய சம்பவங்களும் நடந்தாகின்றன.

இதையும் கடந்து, தமிழக மீனவர்களில் ஒரு தரப்பினர் சட்டத்தை மதிக்காமல் இலங் கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதன் காரண மாக, அவர்களும் உயிரிழப்புக்களைச் சந்திக் கின்ற துன்பம் நடந்தாகின்றது.

இருந்தும் இது விடயத்தில் தமிழக அரசும் தமிழக அரசியல் தரப்புகளும் மௌனம் சாதிப் பதுதான் புரியாமல் உள்ளது.

சரி, அவர்கள்தான் தங்களின் அரசியல் நலன் கருதி மௌனமாக இருக்கின்றனர் என்றால், தமிழகத்தில் இருக்கக்கூடிய கடற் றொழில் சங்கங்கள் மற்றும் அமைப்புக ளாவது இது விடயத்தில் தலையிட்டு எல்லை தாண்டி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்கலாம்.

ஆனால் அவர்களும் அதைச் செய்வதாக இல்லை.

இந்தநிலையில் தமிழக மீனவ சகோதரர் களும் ஈழத் தமிழ் உறவுகளும் முரண்பட்டு வேற்றுமைப்படுகின்ற மிக மோசமான நிலைமை ஏற்படுகின்ற ஆபத்தும் உண்டு.

இஃது ஒட்டுமொத்தத் தமிழ் இனத்துக்கும் பாதகமாக அமைவதுடன் தமிழின எதிரிகள், தங்களின் திட்டங்களைக் கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நாமே களம் அமைத்துக் கொடுப்பதாகவும் இருக்கும்.

ஆகையால் தமிழக மீனவச் சகோதரர் கள் தமது கடல் எல்லையைத் தாண்டி இலங் கைக் கடலுக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதை முற்று முழு தாகத் தவிர்க்க வேண்டும். அந்த நீதியை நம் தமிழக மீனவ சகோதரர்கள் பின்பற்ற வேண்டு மென்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

## அரச வாகனங்களை கணக்கெடுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலுக்கு இணைத்துக் கொள்ள க்கூடிய அரச அதிகாரிகள் மற்றும் பயன்படுத்தக் கூடிய அரச வாகனங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு தேர் தல்கள் ஆணைக்குழு, மாவட்ட தேர்தல் அதிகாரிக ளுக்கு பணிப்புரை விடுத் துள்ளது.

எதிர்வரும் தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதில் பங்குபற்றக்கூடிய அதிகாரிகளின் எண்ணி க்கை தொடர்பில் உரிய ஆவணங்கள், பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாவட்ட தேர்தல் அலு வலகங்கள் ஊடாக குறித்த கணக்கெடுப்பு நடத்தப் படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களின் வாகனங்கள் குறித்த தக வல்களும் பெற்றுக்கொள் ளப் படவுள்ளதாக தேர்தல் கள் ஆணைக்குழு கூறியு ள்ளது. அதற்கான விசேட படிவமும் வெளியிடப்பட்டு ள்ளதாகவும் ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7.10)

## வங்குரோத்து நிலையில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

நாடுவங்குரோத்து நிலை யில் இருந்து மீண்டு விட் டதாக அரசாங்கம் பொய் யான செய்தியை நாட்டு மக்க ளுக்கு வழங்கி அவர்களை ஏமாற்ற முயற்சிப்பதாக எதிர் க்கட்சித் தலைவர் சஜித் பிரே மதாச குற்றம்சுமத்தியுள்ளார்.

இது குறித்து எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரே மதாச மேலும் தெரிவித் துள்ளதாவது, நாடு வங்கு ரோத்து நிலையில் இருந்து மீண்டிருந்தால் சர்வதேச மூலதனச் சந்தைகளில் கடன் பெறும் வாய்ப்பைப் பெறும். ஆனால் இங்கு பொய்யான தகவல்களை அரசாங்கம் வெளியிட்டு வருகின்றது.

எனவே மக்கள் இதனை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். வரிச்சலுகை வழங்கிநாட்டை கட்டியெழு ப்பலாம் என்று அன்றைய ஆட்சியாளர்கள் கூறினர். இதன் விளைவாக எமது நாடு மரணப் பொறியில் சிக்கியது. நாட்டின் பொருளா தாரம் எல்லா வகையிலும் பின்னடைவை சந்தித்து இறுதியில் வங்குரோத்தை யடைந்தது.

ஆனால் இன்று பொருளா தார மீட்சி தொடர்பாக அரசா ங்கம் பொய்யான செய்தி களை வெளியிடுகின்றது என்றார். (ம-7.10)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர்தேவராசாநிரோஜ் அவர்களின் நினைவை முன்னிட்டு அவரது குடும் பத்தினர் மற்றும் விதையை னைத்தும் விருட்சமே குழு மம் இணைந்து நடாத்தும் 38 வது மாபெரும் இரத்த தானமுகாமானதுஎதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் இடம்பெறவுள்ளது. (ம-7.10)

## உலக காலனித்துவ நாடாக இலங்கை மாறும் அபாயம்

### வஜிர அபேவர்தன எம்.பி

ஜனாதிபதிரணில்விக்கி ரமசிங்கவின் பொருளா தாரப் பணியை எவரே னும் சீர்குலைப்பார்களா யின் உலகில் காலனித் துவ நாடாக இலங்கை மாறும் என ஐக்கிய தேசி யக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பின ருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யின் எதிர்காலம் குறித்து விளக்கமளிக்கும் வகை யில் காலி ரத்கம ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான செயற்பாட்டு அலுவலகத் தில் நடைபெற்ற கலந்து ரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கருத்து தெரி வித்த அவர், உள்ளூர் மற்றும் சர்வ தேச விடயங்கள் தொடர் பில் முழுமையான புரிந் துணர்வு ஜனாதிபதிக்கு உண்டு. அதன் காரணமா கவே குறுகிய காலத்தில் இலங்கையை இவ்வாறா னதொரு நிலைக்கு கொண் டுவர முடிந்தது.

இலங்கையின் பொருளா தாரத்தை கட்டியெழுப்பும் இந்த பயணத்திற்கு அனை த்து மக்களும் ஜனாதிப திக்கு ஆதரவளிக்க வேண் டும்.

ஜனாதிபதி நாட்டை விற்றதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர். நாட்டை விற்றாலும் வங்குரோத் தான அரசை யார் வாங் குவது என்றும் கேள்வி எழுப்பினார். (ம-7.10)

## பஸ் - மோட்டார் சைக்கிள் இரத்தினபுரியில் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு

இரத்தினபுரி பிரதேச த்தில் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரத் தினபுரி - பெல்மடுல்ல வீதியில் ரில்ஹேனவத்த சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒரு வர் உயிரிழந்துள்ளதாக பெல்மடுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் (25) செவ்வாய் க்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

இரத்தினபுரியிலிருந்து பெல்மடுல்ல நோக்கிப் பய ணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக் கிள் ஒன்றுடன் மோதிய தில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட் டார் சைக்கிளின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்தி ருந்த நபரொருவரும் காய மடைந்துள்ள நிலையில் பெல்மடுல்ல வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள் ளதாக பொலிஸார் தெரிவி த்தனர்.

இரத்தினபுரி, வெலிக ஹுவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞ ரொருவரே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சட லம் பெல்மடுல்ல வைத்தி யசாலையில் வைக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். (ம-7.10)

## வெளிநாட்டுப் பிரஜை நீரில் மூழ்கி மரணம்

(காலி)

காலி உனவடுன கடற் கரையில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒரு வர் நீரில் மூழ்கி உயி ரிழந்துள்ளதாக ஹபரா துவ பொலிஸார் கூறியுள் ளனர்.

மலேசியா நாட்டைச்சேர் ந்த 61 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள் ளார்.

குறித்த வெளிநாட்டவர் நேற்று முன்தினம் (25) மாலை நீராடச் சென்ற நிலையில், நீரோட்டத்தில் சிக்கியுள்ளதாக பொலி ஸாரின் ஆரம்பக்கட்ட விசா ரணைகளில் தெரியவந் துள்ளது.

பிரதேசவாசிகளின் உதவியுடன் சுற்றுலாப் பயணி மீட்கப்பட்டு காலி கராபிட்டிய வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட் டபின் அவர் உயிரிழந்து ள்ளதாக பொலிஸார் கூறியு ள்ளனர்.

இதேவேளை, வெலிக ந்த பொலிஸ் பிரிவிற்கு ட்பட்ட அசேலபுர பிரதேசத் தில் உள்ள கால்வாயில் குளிப்பதற்குச் சென்ற பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் (25) இரவு நீராடச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற் றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெலிகந்த, அசேலபுர பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய பெண் ஒரு வரே இவ்வாறு உயிரிழந் துள்ளார். (ம-7.10)

## ரணில்தான் மனிதன் நாடு ஏற்றுள்ளது

### அமைச்சர் பிரசன்ன

(கொழும்பு)

ரணில்தான் மனிதன் என்ற நல்ல செய்தியை முழு நாடும் ஏற்றுக்கொண் டுள்ளதாக ஆளும் கட்சி யின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரு மான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார் .

இதோ ஒரு நற்செய்தி எனும் தொனிப்பொருளில் பம்பலப்பிட்டியில் நேற்று புதன்கிழமை (26) நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரி வித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.


இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

சவால்களை ஏற்றுக் கொள்ளும் திறமையால் மொட்டுக்கட்சி ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு உதவியது.

மொட்டுக்கட்சியின் இந்த தீர்மானத்தை இலங் கையிலுள்ள பெரும்பான் மையான மக்களும் அங் கீகரித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

03

"மத சுதந்திரம்" என்பது பங்களாதேஷ் அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அதன் அடிப்படைக் கட்டமைப்பாகும், அதில் மத வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகள் கோருகிறது மற்றும் பல்வேறு தளங்களில் மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதையும் இது தடை செய்கிறது.

பங்களாதேஷ் சில மதச்சார்பற்ற முஸ்லீம்-பெரும்பான்மை நாடுகளில் ஒன்றாகும் மற்றும் "மதமாற்றம்" அதாவது ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறுவது சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டம், பொது ஒழுங்கு மற்றும் ஒழுக்கத்திற்கு உட்பட்டு அரசியலமைப்பின் 41 ஆவது பிரிவின் கீழ் சட்டத்தால் சட்டப்பூர்வமாக் கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி வங்காளதேசத்தில் உள்ள முஸ்லீம் மக்கள் தொகை 150.36 மில்லியனுக்கும் அதிகமாக இருந்தது, இது நாட்டின் மக்கள்தொகையில் 91.04% ஆகும். மியான்மரில் முஸ்லீம்கள் (2016-17) படுகொலை செய்யப்பட்ட காலத்தில் இங்கு வந்த 1 மில்லியனுக்கும் அதிகமான ரோஹிங்கியா முஸ்லீம் அகதிகள் பங்களாதேஷில் வசிப்பதாக மதிப்பீடு காட்டுகிறது.

பங்களாதேஷில் இந்து சமயத்தவர்கள் 13.1 மில்லியனுக்கும் அதிகமாகவும் பௌத்த சமயத்தவர்கள் 1 மில்லியனுக்கும் அதிகமாகவும் உள்ளனர்.

### பங்களாதேசத்தின் பண்டைய வரலாறு

பெரும் வங்காளப் பகுதியிலுள்ள நாகரிகத்தின் எச்சங்கள் நாலாயிரம் வருட பழைமை வாய்ந்தவை. இக் காலப்பகுதியில், திராவிட, திபெத்தோ-பர்ம மற்றும் ஆஸ்திரோ-ஆசிய மக்கள் இப்பகுதிகளில் வாழ்ந்தனர். "பங்கலா" அல்லது "பெங்கால்" என்ற சொல்லின் சரியான மூலம் அறியப்படவில்லை. இருப்பினும், இப்பகுதிகளில் கி.மு. 1000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடியேறிய திராவிட மொழி பேசும் குழுவான "பாங்" இலிருந்து வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கி.மு. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து கங் கரிதாய் இராச்சியம் உருவாகியது. இது பின்னர் சிசுநாக வம்சம், நந்தர், மௌரியப் பேரரசு, சுங்கர், சாதவாகனர் மற்றும் கண்வப் பேரரசுகளின் காலப்பகுதியில், பிகாருடன் இணைந்து அப்பேரரசுகளின் கீழ் காணப்பட்டது.

கி.பி. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து 6 ஆம் நூற்றாண்டு வரை குப்தப் பேரரசு மற்றும் ஹர்சப் பேரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதன் வீழ்ச்சிக்குப் பின், சசாங்கன் எனும் ஆற்றல் மிகு வங்காள தேசத்தவன் ஒரு சிறந்த, குறுகியகால அரசொன்றை நிறுவினான். சிறிதுகால, சர்வாதிகார ஆட்சியின்பின், வங்காள பௌத்த, பால வம்சம் நானூறு வருடங்கள் ஆட்சி புரிந்தது. இதன்பின், சிறிதுகாலம் இந்து சேன வம்சம் ஆட்சி புரிந்தது.

மத்தியகால ஐரோப்பிய புவியியலாளர்கள் கங்கைக் கழிமுகப்பகுதியில், ஒரு சொர்க்கம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர். இது மிகைப்படுத்தப்பட்டதாக இருந்தாலும், 16 ஆம் நூற்றாண்டு வரை இந்திய உபகண்டத்திலேயே செல்வச் செழிப்பு மிக்க பகுதியாக வங்காளம் காணப்பட்டிருக்கக்கூடும். இப்பகுதியின் ஆரம்பகால வரலாறு, இந்துப் பேரரசுகள், உட்பூசல்கள் மற்றும் இந்து மற்றும் பௌத்த மதங்களுக்கிடையிலான ஆதிக்கப் போட்டி என்பவற்றால் நிரம்பியது.

அராபிய முஸ்லிம் வணிகர்களால் 12 ஆம் நூற்றாண்டளவில் வங்காளப் பகுதியில் இஸ்லாமிய சமயம் அறிமுகப் படுத்தப்பட்டது. சூஃபி போதகர்கள் மற்றும் அதனையடுத்த முஸ்லிம் ஆட்சி ஆகியவை இப்பகுதி முழுவதும் இஸ்லாம் பரவ வழி செய்தன.

துருக்கிய தளபதியான பக்தியார் கில்ஜி, 1204 இல், சேன வம்சத்தின் லக்ஷ்மண் சேன் என்பவரைத் தோற்கடித்து, வங்காளத்தின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றினார். இப்பகுதி அடுத்த சில நூறு வருடங்களுக்கு பல சுல்தான்களாலும், இந்து அரசர்களாலும், நிலப்பிரபுக்களாலும் ஆளப்பட்டன.

16 ஆம் நூற்றாண்டளவில், முகலாயப் பேரரசு வங்காளத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததோடு, டாக்கா முகலாய நிர்வாகத்தின் முக்கிய நிலையமாக உருவானது. 1517 இலிருந்து, கோவாவிலிருந்த போர்த்துக்கீச வியாபாரிகள் வங்காளத்துக்கான கடல் வழியைக் கண்டுபிடித்தனர். 1537 இல் மட்டும் அவர்கள் குடியேற அனுமதிக்கப்பட்டதோடு, சிட்டகொங்கில் சுங்கச் சாவடிகள் அமைக்கவும் அனுமதிக் கப்பட்டது.

1577 இல், முகலாயப் பேரரசரான அக்பர், நிலையான குடியேற்றங்களை அமைக்கவும், தேவாலயங்கள் அமைக்கவும் போர்த்துக்கீசருக்கு அனுமதி வழங்கினார். ஐரோப்பிய வணிகர்களின் செல்வாக்கு அதிகரித்து, இறுதியில் 1757 பிளாசிப் போரின் பின் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி வங்காளத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

### பிளாசி போர் (Battle of Plassey)

பிளாசி போர் (Battle of Plassey) என்பது 1757 இல் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்துக்கும், வங்காளத்தின் நவாப் சிராச் உத்தவ்லாவிற்கும் இடையே நடைபெற்ற ஒரு போர். இதில் கிழக்கிந்திய நிறுவனம் வெற்றி பெற்று வங்காளத்தைக் கைப்பற்றியது. இவ் வெற்றியே இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி தோன்றியதன் முதல் படியாகக் கருதப்படுகிறது.

1857 ஆம் ஆண்டு நடந்த சிப்பாய் கலகத்திற்குப் பின், இதன் அதிகாரம் பிரித்தானிய முடியின் கீழ் வந்ததுடன், பிரித்தானிய வைஸ்ராய் இதன் நிர்வாகத்தலைவராக நியமிக்கப்பட்டார்.

### சிப்பாய்க் கலகம்

இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி, 1857 (Indian Rebellion of 1857) அல்லது சிப்பாய்க் கலகம் என்பது பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய்கள் மே 10, 1857 இல் இந்தியாவில் மீரட் என்ற நகரில் தொடங்கிய கிளர்ச்சியைக் குறிக்கும்.

இக்கிளர்ச்சி பின்னர் இந்தியாவின் பல இடங்களிலும், குறிப்பாக இந்தியாவின் மத்திய மலைப் பகுதிகளில், பரவியது. பொது மக்கள் பலரும் இக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டனர். முக்கிய கிளர்ச்சி இன்றைய உத்தரப் பிரதேசம், உத்தரகாண்டம், வடக்கு மத்தியப் பிரதேசம், டில்லி, மற்றும் குர்காவுன் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டிருந்தது.

கிளர்ச்சியாளர்கள் பிரித்தானியப் படையினருக்கு ஒரு பெரும் சவாலாக விளங்கினர். ஜூன் 20, 1858 இல் குவாலியர் நகரின் வீழ்ச்சியுடன் இது முடிவுக்கு வந்தது. இக்கிளர்ச்சி "இந்தியாவின் முதலாவது விடுதலைப் போர்", அல்லது "சிப்பாய்க் கலகம்" எனவும் அழைக்கப்படுகிறது.

18 ஆம் நூற்றாண்டில் இந்துப் பேரரசான மராத்தியப் பேரரசு, முகலாயர்களைத் தோற்கடித்ததோடு, 1742 இற்கும் 1751 இற்கும் இடையில் வங்காளத்தின் நவாப்பின் கீழிருந்த பகுதிகளையும் அழித்தது. நவாபின் ஆட்சியின் கீழிருந்த வங்காளம் மற்றும் பீகார் பகுதிகளின் மீதான மராத்தியப் பேரசின் தொடர் தாக்குதல்களால் வங்காளப் பொருளாதாரம் அழிவடைந்தது. இதனால் மராத்தியப் பேரரசின் தொடர் தாக்குதல்களுக்கு அதனால் முகங்கொடுக்க முடியவில்லை.

நவாப் அலி வர்தி கான் மராத்தியப் பேரரசுடன் சமாதான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டு முழு ஒரிசாவையும், மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளையும், மராத்தியப் பேரசுக்கு அளித்தான். இதற்கு மேலதிகமாக வங்காளத்தின் ஏனைய பகுதிகளிலும் பீகாரிலும் வசூலிக்கப்படும் வரியில், கால்பங்கை திறையாக(சௌத்) அளிக்கவும் ஒப்புக்கொண்டான். இது அண்ணளவாக வருடத்துக்கு, வங்காளத்திலிருந்து 20 லட்சங்களும், பீகாரிலிருந்து 12 லட்சங்களும் ஆகும்.

பனிபட்டில் முஸ்லீம் கூட்டுப் படைகளுடனான போரில் மராத்தியப் பேரரசின் தோல்விக்குப்பின் இப்பேரரசு மராத்தியத் தளபதியான மாதோஜி சிந்தியாவிடம் கையளிக்கப்பட்டது. இவர் மீண்டும் வங்காளம் மீது படையெடுத்தார். 1760 களில், வங்காளப் பகுதிகளை ஆக்கிரமித்த பிரித்தானிய இந்தியப் பேரரசு, சௌத் வரியை வழங்குவதை நிறுத்திக் கொண்டது. இதனால் வங்காளம் மீதான மராத்தியரின் படையெடுப்பு தொடர்ந்தது. இறுதியில், 1777 இலிருந்து 1818 வரை நடைபெற்ற மூன்று ஆங்கில-மராத்தியப் போர்களில் மராத்தியப் பேரரசு பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்டது.

காலனித்துவ ஆட்சியின்போது, தெற்காசியா முழுவதும் பெரும் பஞ்சங்கள் ஏற்பட்டன. இவற்றுள் 1943 இன் வங்காளப் பெரும் பஞ்சம் காரணமாக 2-4 மில்லியன் பேர் இறந்தனர்.

### 1943 இன் வங்காளப் பெரும் பஞ்சம்

1943 வங்காளப் பஞ்சம் (Bengal famine of 1943) என்பது 1943 இல் பிரித்தானிய இந்தியாவின் வங்காள மாகாணத்தைப் பாதித்த ஒரு பெரும் பஞ்சம். 20 முதல் 40 லட்சம் மக்கள் இப்பஞ்சத்தால் மாண்டனர். பஞ்சத்தின் காரணங்கள், அதனைக் காலனிய அரசு கையாண்ட முறை பற்றி உலக வரலாற்றாளர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் இந்தியாவில் உணவுப் பொருள் பற்றாக்குறை நிலவியதாகப் பல வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். பருவ மழைப் பொய்ப்பு, பயிர் நோய்கள் போன்ற காரணங்களால் விளைச்சல் குறைந்தது. வங்காளத்தின், குறிப்பாக கொல்கத்தா நகரின் உணவுத் தேவைகள் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியால் பூர்த்தி செய்யப்பட்டன.

1942 இல் பர்மா மீது ஜப்பானியப் படைகள் படையெடுத்ததால், அங்கிருந்து அரிசி இறக்குமதி தடைபட்டது. மேலும் பர்மாவிலிருந்து வங்காளத்துக்கு தப்பி வந்த அகதிகளால் மக்கள் தொகையும் அதிகரித்தது. இரண்டாம் உலகப் போரில் ஈடுபட, இந்திய இராணுவத்தின் எண்ணிக்கை பலமும் வெகுவாகக் கூட்டப்பட்டிருந்தது. அரிசித் தேவை அதிகரித்தவுடன் பதுக்கலும் பரவலானது என்று பல வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.

இந்த பஞ்சத்துக்கு உணவு தட்டுப்பாடு காரணம் அல்ல, இரண்டாம் உலகப் போரால் உணவுப் பொருட்களின் விலை ஐந்து மடங்கு ஏறியதால், சாதாரண மக்கள் உணவை வாங்கும் சக்தியை இழந்துவிட்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றும்...

சேவைகளில் இருந்தும்விலகும்தொழில் நடவடிக்கையில் ஈடுபட கிராம அலுவலர்கள் சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கை ஐக்கிய கிராம அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க இதனைத் தெரிவித்தார். (ம-7,10)

## துவிச்சக்கர...

கடந்த 18ஆம் திகதி கிளிநொச்சி சந்தையில் மீன் வாங்கிக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தவர் சோவியர் கடைச் சந்தியில் மயங்கி வீழ்ந்துள்ளார்.

உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,10,60)

## பால் புரைக்கேறி...

குழந்தை அசைவற்றுக் கிடப்பதனை அவதானித்த பெற்றோர் குழந்தையினை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

குழந்தையினை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பிலான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற உடற்கூற்றுப் பரிசோதனையில் பால் புரைக்கேறியமையினாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## அதிபர்கள்...

றைய (நேற்று) போராட்டத்தை நசுக்க, நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசி, அதிபர், ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்திய ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து இன்று 27ஆம் திகதியும் அதிபர், ஆசிரியர்களின் சுகவீன விடுமுறைப் போராட்டம் தொடரவுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டிக்கும் விதமாக இன்று (நேற்று) போல் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் நாளைய தினமும் (இன்று) ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## மாங்குளத்தில்...

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் குப்பிளானைச் சேர்ந்த வாகனச் சாரதியான குணசீலன் லோகேஸ்வரன் (வயது-38), வடமராட்சி கோவிற்கடவையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பார்த்திபன் மற்றும் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருத்த வேலை காரணமாக சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த சொகுசு பேருந்து ஒன்றின் பின்பகுதியில் டிப்பர் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த பேருந்து ஒன்று பழுதடைந்ததன் காரணமாக ஏ9 வீதியில் 228 ஆவது கிலோமீற்றர் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது.

இதன்போது பேருந்தில் வருகை தந்தவர்கள் இறங்கி பேருந்தின் பின்புறமாக நின்று கொண்டிருந்தபோது அதே திசையில் வருகை தந்த டிப்பர் ஒன்று குறித்த நபர்கள் மீதும் பேருந்தின் மீதும் மோதியுள்ளது.

இதில் சம்பவ இடத்திலேயே மூவர் உயிரிழந்துள்ளனர். டிப்பர் சாரதி மற்றும் பேருந்தில் பயணித்த ஒருவர் என இரண்டு பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,239)

# மூன்றாம் பாலினத்தவர்கள் வவுனியாவில் நடைபவனி

வவுனியாவில் மூன்றாம் பாலினத்தவர்களின் உரிமைகளை வலியுறுத்தி, அவர்களையும் மனிதர்களாக எண்ண வேண்டும் என கோரிக்கை வைத்து நடைபவனி ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா புதிய பேருந்து நிலையத்திலிருந்து நகர் வழியாக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தை இந்த நடைபவனி சென்றடைந்து அங்கு நிறைவு பெற்றிருந்தது. (ம-7,10)

## வடக்கில்...

முறையில் முன்னெடுக்கப்படுவதாக வட மாகாண ஆளுநர் பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம்.சார்ள்ஸுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன் போது மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு, தொழில் வாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 1500 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளதாகவும், அவர்களை மீள் குடியேற்றுவதற்கான உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, காணி விடுவிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும்வகையில், "உரித்து" செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். வெளிநாடுகளில் உள்ள வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள் நாட்டிற்கு வருகை தந்து தங்களின் காணி உறுதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தை சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு தகைமைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.

அத்துடன் வடக்கு மாகாணத்திற்கான போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும், உள்நாட்டு விமான போக்குவரத்தை முன்னெடுப்பது தொடர்பில் மத்திய அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5516 — L 1 1 2 9 9 5
அத சம்பத — L 2 9 9 5 — சீட்டிழுப்பு இலக்கம் 91 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 1546 — C 16 20 31 72 C — Double Chance 43254

மெகா பவர் — திகதி 26/06/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1864 — N 18 03 11 33 41 — 97080

லக்கி 7 VIP — திகதி 2024.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0342 — W 1 8 9 4 6 0 W

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3758 — சீட்டிழுப்பு திகதி 26.06.2024 — X 28 32 68 72 — X 60266

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0825 — தனுசு 02 17 48 56 தனுசு — 64267 — 15

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2490 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 26.06.2024 — தினம் புதன்கிழமை — 06 24 51 70 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,460,202.40 — DLB

சனிதா — திகதி 2024.06.26 — வெற்றி வாரம் 4651 — 30 36 43 72 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,842,650.40 — 20423 — DLB

உத்தியோகபூர்வ முடிவுகள் — 26.06.2024 — வெற்றி வாரம் 224 — வர்ணம் பச்சை — W 0 4 2 7 2 8 — 41374 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,412,740.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4202 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.06.26 — தினம் புதன்கிழமை — 07 29 32 36 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,464,469.60 — 632841 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Y 33 31 38 47 53 — 1666 — இள நீலம் — 26.06.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,766,765.80 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.06.26 — வெற்றி வாரம் 2037 — வர்ணம் மஞ்சள் — 06 12 38 45 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,084,869.20 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் : 2316 — சீட்டிழுப்பு திகதி : 2024.06.26 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 123,085,280.80 — 07 38 39 62 G — 429582 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானவர்

# 24 நாட்களின் பின்னர் கிளிநொச்சி பொலிஸில் சரண்

(முறிகண்டி)

கடத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளான நிலையில் 24 நாட்களின் பின் பொலிஸில் சரணடைந்த நபரால் கிளிநொச்சியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2ம் திகதி கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சிங்கராஜன் ஜெயக்குமார் என்பவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் காலை, காணாமல் போனதாக தேடப்பட்ட குறித்த நபர் வெட்டுக்காயங்களுடன் அடைத்து வைத்திருந்த வீட்டிலிருந்து தப்பிச் சென்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

தன்னை ஒரு கும்பல் கடத்தி வைத்து சித்திரவதை செய்ததாக வாக்குமூலம் அளித்ததுடன், வெவ்வேறு இடங்களுக்கு மாற்றி சித்திரவதை செய்ததாக குறிப்பிட்டார். தொடர்ந்து, குறித்தநபர் தப்பி சென்ற வீட்டுக்கு அழைத்துச் சென்ற பொலிஸார் சாட்சியங்களை பதிவு செய்ததுடன், தடயவியல் சான்றுகளையும் பெற நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து குறித்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக குற்றத்தடுப்புப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7.10.100)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0682)
076 825 7716 (ஆகாஸ்)

# யாழ். மக்களுக்கு சுத்தமான குடி நீரை பெற்றுக் கொடுப்பது

## வட பிராந்திய கடற்படை தளபதியுடன் ஆளுநர் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் வட பிராந்திய கடற்படை தளபதியுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை கடற்படையின் வடக்கு பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அத்மிரல் ரோஹித்த அபேசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை, ஆளுநர் செயலகத்தில் நேற்று சிநேகபூர்வ ரீதியாக சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார். யாழ் குடா நாட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கும், தீவுப் பகுதி மக்களுக்கான மருத்துவ வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இலங்கை கடற்படை முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-7.10.33)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(0111)


# Vacancy Announcement

CANE - Sri Lanka, is a volunteer organization, involve in cancer control, palliative care and end of life care activities. We are seeking a dedicated **'Community Project Coordinator'** that would be part of the community workforce to assist with the delivery of health camp and implementation of a community-based cancer education and early detection program in the Northern Province of Sri Lanka.

- **Education** : A Degree in any discipline from a University recognized by UGC.
- **Added advantage** : At least 3 years of experience in project management, preferably in Community health.
- **Skills** : Strong leadership, organizational, and communication skills. Ability to work independently and as part of a team. Proficiency in English, both written and speaking are essential. Speaking Tamil and Sinhala are advantage.
- **Attributes** : Deep commitment to promoting health and empowering communities.

## General conditions

- Age should be below 40 years, on the date closing application.
- Must have valid driving license

**Preference will be given to candidates residing in and around Northern Province This position holder has to report functionally oncology in charge of the Cancer early detection center (CEDC) teaching hospital Jaffna and hierarchicallyto Chairman, Board of management CANE Sri Lanka.**

## Selection Criteria

- Demonstrated ability in project management within community-based settings.
- Experience with logistical and resource management for community events.
- Proven track record of successful team leadership and stakeholder collaboration.

## Duration of the Appointment:

Appointment will be made initially for 12 months and extendable base on the performance.

(1340)

## Remuneration:

A monthly salary of LKR 60,000.00 and you will contribute 8 % of your salary towards the employee's provident fund and the employer will contribute 12% of your salary towards employee's provident fund and 3% towards employee's trust fund.

**If you are an interested candidate, you have been requested to send your updated CV with two non - related referee's details to the following e-mail or the mailing address on or before 15.07.2024**

**e-mail address:**
**cane_jaffna@yahoo.com**
**Mailing address: CANE Sri Lanka, No.05, Sabapathipillai Lane,Uduvil, Chunnakam.**

See the QR code for more details
f → Anpaalayam Cane
→ 021 224 0258


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0681)

Show Money
1%
லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான
வங்கி இருப்பு/ விசா சேவை
T.P : 075 033 6759
(1263)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0681)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0681)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச்சங்க தலைவருமான

அமரர்

## பொ. கமலநாதன்



அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கிருபாகர சிவசுப்பிரமணியரை வேண்டி நிற்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)**

(C-680) (116)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, ... றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.